පාර්ලිමේන්තු ප්‍රකාශන මාලා අංකය- 79

ආයතනයේ නම - ඉඩම් අමාත්‍යාංශය, ඉඩම් කොමසාරිස් ජනරාල් දෙපාර්තමේන්තුව, මිනින්දෝරු දෙපාර්තමේන්තුව, ඉඩම් හිමිකම් නිරවුල් කිරීමේ දෙපාර්තමේන්තුව, ඉඩම් පරිහරණ ප්‍රතිපත්ති සැලසුම් දෙපාර්තමේන්තුව

පාර්ලිමේන්තුවේ රජයේ ගිණුම් පිළිබඳ කාරක සභාව විසින් සභාගත කරන ලද වාර්තා සම්බන්ධයෙන් ස්ථාවර නියෝග අංක 119(4) යටතේ ගරු ආයතන භාර අමාත්‍යවරයාගේ නිරීක්ෂණ හා ගනු ලබන පියවර පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කිරීම.

பாராளுமன்ற அமர்வு இலக்கம் -79

நிறுவனத்தின் பெயர் -

காணி அமைச்சு, காணி ஆணையாளர் திணைக்களம், நில அளவைத் திணைக்களம், காணி உரித்து நிர்ணயத் திணைக்களம், காணி உபயோகத் திட்டமிடல் திணைக்களம்.

பொதுக் கணக்குகளுக்கான பாராளுமன்றத்தின் குழுவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகள் தொடர்பில் நிலையியற் கட்டளை இல.119 (4) இன் கீழ் நிறுவனத்துக்குப் பொறுப்பு வகிக்கும் கௌரவ அமைச்சரினால் மேற்கொள்ளப்பட்ட அவதானங்கள் மற்றும் நடவடிக்கைகள் ஆகியவற்றைச் சமர்ப்பித்தல்.

Parliament Session No.-79

Name of the institution – Ministry of Lands, Land commissioner General's Department, Servey Department of Sri Lanka, Land Title Settlement Department, Department of Land Use Policy Planning

Submission of the observations and steps Taken by the Hon. Minister in charge of the institute under the standing order No'119(4) related to the reports tabled into the parliament by the committee of Public Accounts (COPA) to the parliament.

பாராளுமன்றத்தின் அரச கணக்குகள் பற்றிய குழுவினால் சபையில் முன்வைக்கப்பட்ட நிலையியற் கட்டளை 119(4) தொடர்பில் கண்காணிப்பு மற்றும் எடுக்கப்படும் நடவடிக்கைகளை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்.

பாராளுமன்ற அமர்வு இல : 79
நிறுவனத்தின் பெயர் : **காணி அமைச்சு**

குழுவினால் இனங்காணப்பட்ட குறைபாடுகள்	**சீர் செய்வதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள்/ தற்போதைய நிலமைகள்**
முதலாம் பகுதி 90.00	
தலைமை கணக்காய்வாளரால் சமர்ப்பிக்கப்பட்டிருந்தஅனைத்து கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் ஒரு மாத காலத்திற்குள் பதிலளிக்கப்படவில்லை. உள்ளககணக்காய்வு ஐயவினாக்களுக்குஒரு மாதத்திற்குள் பதிலளிக்கப்படாத சந்தர்ப்பங்கள் இருந்தன. ஒரு வருடத்திற்கும் மேலாக நிலுவையிலுள்ள கடன் மீதிகள் இருந்தன.	இந்த நிலையைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் கணக்காய்வு ஐயவினாக்களுக்குஉரிய வகையில் பதில்கள் வழங்கப்பட்டு வருகின்றன. நிலுவையில் உள்ள கடன் நிலுவை தற்போதுதீர்க்கப்பட்டிருப்பதுடன் மருத்துவ காரணங்களுக்காக பணியிலிருந்து ஓய்வு பெறச் செய்த ஒரு அதிகாரியின் ஓய்வூதியம் 2029 ஆம் ஆண்டில் சரிசெய்யப்படுவதால், அந்தக் கடன் நிலுவை மாத்திரமே எஞ்சியுள்ளது.
இரண்டாம் பகுதி 90.00	
திட்டமிடப்பட்ட பயிற்சி வாய்ப்புகளில் வழங்கப்பட்ட பயிற்சி வாய்ப்புகளின் எண்ணிக்கை 50% க்கும் குறைவாகவே இருந்தது.	2022 ஆம் ஆண்டுக்கான பயிற்சித் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தாலும், 2022 ஆம் ஆண்டில் நிலவியகொவிட் 19 வைரஸ் தொற்று நோய் காரணமாக விதிக்கப்பட்ட பயணக் கட்டுப்பாடுகள் காரணமாக, திட்டமிடப்பட்ட அனைத்து பயிற்சித் திட்டங்களும் அந்த ஆண்டில் நடக்க முடியவில்லை. மேலும், அந்த ஆண்டில் பொருளாதார நெருக்கடி காரணமாக, செலவுகளைக் கட்டுப்படுத்துவது அவசியமாக இருந்ததால், திட்டமிட்டபடி பயிற்சி வாய்ப்புகளுக்கு அதிகாரிகளை ஈடுபட முடியவில்லை. இருப்பினும், தற்போது, தேசிய வரவு செலவு சுற்றறிக்கை 01/2024 இன் ஏற்பாடுகளுக்கு கவனம் செலுத்திஆண்டுதோறும் தயாரிக்கப்பட்ட பயிற்சித் திட்டத்தின்படியும், அங்கீகரிக்கப்பட்ட ஏற்பாடுகளின் அடிப்படையிலும், காணித் துறையில் உள்ள அனைத்து சேவைகளையும் உள்ளடக்கிய வகையில் பயிற்சி வாய்ப்புகளுக்கு அதிகாரிகள் ஈடுபடுத்தப்படுகின்றனர்.

தொட. இல.	குழுவினால் இனங்கண்டுகொள்ளப்பட்ட குறைபாடுகள்	குறைபாடுகளை சரி செய்வதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் தற்போதைய நிலைமை
1	கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வு ஐய வினாவுக்கு ஒரு மாத காலத்தினுள் பதில் அளிக்கப்படாதிருந்தமை.	சில கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதிலளிப்பதற்குத் தேவையான தகவல்களை மாகாணங்களுக்கு இடையேயான அலுவலகங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களிலிருந்து பெற வேண்டிய சந்தர்ப்பங்களில், மேலதிக காலம் தேவைப்படுவதனால் அதற்குப் பதிலளிப்பதற்கு ஒரு மாதத்திலும் அதிக காலம் எடுக்கின்றது. அவ்வாறான சந்தர்ப்பங்களில், அந்த கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதிலளிப்பதற்கு மேலதிக காலத்தைக் கோரி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு எழுத்துபூர்வ கோரிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் கணக்காய்வு ஐய வினாக்களுக்கான பதிலை துரிதப்படுத்துவதற்கு சம்பந்தப்பட்ட பிரிவுகள் மற்றும் அதிகாரிகளை அறிவுறுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (இணைப்பு 01)
2	உள்ளக கணக்காய்வு ஐய வினாக்களுக்கு ஒரு மாத காலத்தினுள் பதில் அளிக்கப்படாதிருந்தமை.	கணக்காய்வு ஐய வினாக்களுக்கு உரிய காலப் பகுதியினுள் பதில் அளிக்குமாறு திணைக்களத்தின் அனைத்துப் பிரிவுகளுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.
3	வருடாந்த பொருட்கள் கணக்கெடுப்பின்போது வெளிப்படுத்தப்பட்ட மேலதிகம், குறைபாடுகள் பற்றிய பரிந்துரைகள் மற்றும் ஏனைய பரிந்துரைகள் உரிய காலப் பகுதியினுள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்காமை.	குறைபாடுகள் தொடர்பான நி.ஒ. 04 (1) அறிக்கை மற்றும் நி.ஒ. 109 கட்டளை பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதுடன், நட்டங்களை பதிவழிப்புச் செய்வதற்கான ஏற்பாடுகளைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மேலதிகம் தொடர்பான பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.
4	வாகனமொன்று சேதமடைந்து 08 மாதங்களிலும் குறைந்த காலப் பகுதியினுள் புறத்தொதுக்கப்பட்டிருக்காதிருத்தல்.	தற்போது இந்த வாகனம் புறத்தொதுக்கப்பட்டுள்ளது.
5	அரசாங்க வாகன விபத்துக்கள் தொடர்பாக நி.ஒ.விதிகளின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்காதிருத்தல்.	வாகன விபத்துக்கள் தொடர்பாக நி.ஒ. விதிகளின் பிரகாரம் அலுவல்கள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.
6	நி.ஒ. 94(1) பிரகாரம் செலவு விடயத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் ஆண்டிறுதியில் மீதி நிதி ஏற்பாட்டை விஞ்சி பொறுப்புக்களை ஏற்படுத்திக்கொண்டிருந்தமை.	அந்த நிலைமைகள் சரி செய்யப்பட்டுள்ளன. தற்போது மீதி நிதி ஏற்பாடுகள் வரையறையை விஞ்சிய பொறுப்புக்கள் ஏற்படுத்திக்கொள்ளப்படுவதில்லை.
7	ஒரு வருடத்திலும் அதிக காலமாக நிலவி வரும் நிலுவைக் கடன் தொகை	**ஓய்வு பெற்றுள்ள -** ஜீ.ஜீ.மார்ட்டின் ரூ.19,940/- பதிவழிப்புச் செய்யப்பட்டுள்ளது. ஆர்.ஏ.கொடகந்த ரூ.72,983/- பணிக்கொடையிலிருந்து அறவிட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. **பணி நீக்கம் -** யூ.டப்ளியூ.தென்னகோன் ரூ.16,495/- செலுத்தப்பட்டுள்ளது. டீ. புஷ்பகுமார ரூ.177,080.44 தவணை அடிப்படையில் அறவிடப்படுகின்றது. ஏ.ஏ.முனசிங்க ரூ.35,424.00 செலுத்தப்பட்டுள்ளது. ஏ.ஜீ.லியனகே ரூ. 116,800 வில் ரூ. 79,650 நிலுவை அறவிடப்பட வேண்டியுள்ளது.
8	பொது வைப்புக் கணக்கில் காலாவதியாகியிருந்த வைப்புத் தொகை தொடர்பாக நி.ஒ. 57 பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படாமை	தற்போது காலாவதியாகியுள்ள வைப்புக்கள் எதுவுமில்லை.

9	நி.ஒ. 371 பிரகாரம் வழங்கப்பட்ட நிமித்தக் கட்டு நிதி குறித்த அலுவல் நிறைவடைந்து ஒரு மாதத்திற்குள் தீர்க்கப்படாதிருத்தல்.	தொடர்புடைய அலுவலர்களை அறிவுறுத்தி அந்த நிலைமையை தவிர்த்துக்கொள்வதற்கு எழுத்து மூலமாக அறிவுறுத்தப்பட்டுள்ளது.
10	அங்கீகரிக்கப்பட்ட வரையறையை விஞ்சி ஆளணிக்கு ஆட்சேர்த்துக்கொள்ளப்பட்டிருத்தல்	அங்கீகரிக்கப்பட்ட வரையறைக்குள் மாத்திரமே ஆளணி அங்கத்தவர்கள் ஆட்சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளனர்.
11	2018.01.24 ஆம் திகதிய 05/2018(1) ஆம் இலக்க சுற்றறிக்கையினால் திருத்தப்பட்ட 2008.02.06 ஆம் திகதிய 08/2008 ஆம் இலக்க பொது நிருவாகம் மற்றும் முகாமைத்துவ அமைச்சின் சுற்றறிக்கைப் பிரகாரம் பிரஜைகள் /சேவை பெறுநர் பட்டயத்தை உரிய பிரகாரம் தயாரித்திருக்காமை.	தற்போது பிரஜைகள் /சேவை பெறுநர் பட்டயம் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் 2026.01.01 ஆம் திகதி முதல் காட்சிப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
12	நிறுவனத்தின் பிரஜைகள் /சேவை பெறுநர் பட்டயம் நடைமுறைப்படுத்தப்படல் தொடர்பாக கண்காணிப்பதற்கு அல்லது மதிப்பீடு செய்வதற்கான முறையொன்று தயாரிக்கப்பட்டிருக்காமை.	தற்போது பிரஜைகள் /சேவை பெறுநர் பட்டயம் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் 2026.01.01 ஆம் திகதி முதல் காட்சிப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
13	2018 ஜனவரி 24 ஆம் திகதிய 02/2018 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கமைய உரிய பிரகாரம் தயாரிக்கப்பட்ட மனித வளங்கள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்காமை.	2023 ஆம் ஆண்டாகும்பொது தயாரிக்கப்பட்டுள்ளது.
14	தயாரிக்கப்பட்ட மனித வளங்கள் திட்டத்தினூடாக ஆளணியின் 50 % இற்கும் அதிகமானோருக்கு வருடத்தில் குறைந்தது 12 மணித்தியாலங்களுக்குக் குறையாத பயிற்சி வாய்ப்பை உறுதி செய்திருக்காமை.	செலவுக் கட்டுப்பாடுகள் தொடர்பான சுற்றறிக்கைகளுக்கமைய பயிற்சிகளை நடாத்துவதற்குத் தேவையான நிதி ஏற்பாடுகள் இல்லாமையின் காரணமாக வரையறுக்கப்பட்ட பயிற்சிகள் மாத்திரம் நடாத்தப்பட்டன. 2026 ஆம் ஆண்டு முதல் ஆளணியில் 50% இற்கும் அதிகமானோருக்கு வருடத்தில் குறைந்தது 12 மணித்தியாலங்களுக்குக் குறையாத பயிற்சி வாய்ப்பை உறுதி செய்வதற்குத் தேவையான மனித வளங்கள் திட்டத்தை தயாரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
15	ஒட்டு மொத்த ஆளணி உள்ளடக்கப்படும் வகையிலான செயலாற்றுகை ஒப்பந்தங்கள் தயாரிக்கப்பட்டு ஒப்பந்தங்கள் ஏற்படுத்திக்கொள்ளப்படாதிருந்தமை	ஒப்பந்தங்கள் ஏற்படுத்திக்கொள்ளப்பட்டுள்ளது.
16	மனித வளங்கள் அபிவிருத்தித் திட்டத்தை தயாரிப்பதற்கும் இயலளவு மற்றும் திறன் விருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு நிறுவனத்தில் சிரேஷ்ட உத்தியோகத்தர் ஒருவரை பெயர் குறிப்பிடப்படாமை.	எஸ்.ஏ.என்.எம். சிறிவர்தன - காணி ஆணையாளர் (நிருவாகம்)
17	திட்டமிடப்பட்டிருந்த பயிற்சி வாய்ப்புக்களில் வழங்கப்பட்டிருந்த வாய்ப்புக்கள் 50% இலும் குறைந்த மட்டத்தில் நிலவியமை.	ஆளணிக்கான பயிற்சிக்காக போதுமானளவு நிதி ஏற்பாடு இல்லாமையின் காரணமாக வரையறுக்கப்பட்ட பயிற்சிகள் மாத்திரம் நடாத்தப்பட்டன. இந்த ஆண்டிலிருந்து ஆளணியில் 50% இற்கும் அதிகமானோருக்கு பயிற்சி வாய்ப்புக்களை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
18	நிறுவனத்தின் கணக்குகள் பற்றிய கணக்காய்வுக் கருத்துரை, சிறந்த மட்டத்தில் / இடைநிலை மட்டத்தில்/ பாதகமான மட்டத்தில்	சிறந்த மட்டம்

நிலையியற் கட்டளை இலக்கம் 119 (4) இன் பிரகாரம் அரசாங்க கணக்குக் குழுவினால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை தொடர்பான அவதானிப்புகள் மற்றும் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை முன்வைத்தல்.	
குழுவினால் இனங்காணப்பட்ட பலவீனங்களும் குறைபாடுகளும்	**திருத்துவதற்காக முன்னெடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் / தற்போதைய நிலைமை**
முதலாம் பகுதி: 88.0	
01. 2024.05.11 ஆம் திகதிய மற்றும் 171/2004 ஆம் இலக்க அரசாங்க கணக்குச் சுற்றறிக்கையின் பிரகாரம் அரசாங்கத்தின் சம்பளத்தைத் தயாரிக்கும் கணினி மென்பொருளிற்குரிய கடவுச்சொல் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை மாற்றப்பட்டு இருக்கவில்லை.	நில அளவைத் திணைக்களத்தின் பிரதான அலுவலகத்தின் GPS -- PAYROLL மென்பொருளின் கடவுச்சொல்லை 03 மாதங்களுக்கு ஒரு முறை மாற்றுவதற்கு ஆவன செய்யப்பட்டு உள்ளது.
02. கணக்காய்வாளர் நாயகத்தினால் முன்வைக்கப்பட்டிருந்த சகல கணக்காய்வு உசாவல்களுக்கும் ஒரு மாத காலத்திற்குள் வாதுரை முன்வைக்கப்பட்டு இருக்கவில்லை.	சகல கணக்காய்வு உசாவல்களுக்கும் வாதுரை முன்வைப்பதில் அவ்வாறு தாமதமடையவில்லை என்றாலும், பிராந்திய அலுவலகங்களின் கணக்காய்வின் போது மேலதிக நில அளவையாளர் (களம்) அவர்கள் மூலம் மாகாண நில அளவையாளர் நாயகம் ஊடாக மாவட்ட சிரேஷ்ட நில அளவை அத்தியட்சகர் முலம் பிராந்திய அலுவலகங்களில் இருந்து வாதுரை பெற்றுக் கொள்வதில் தாமதம் ஏற்படுகின்றது.
03. உள்ளகக் கணக்காய்வு உசாவல்களுக்கு ஒரு மாத காலத்திற்குள் வாதுரை முன்வைக்காத சந்தர்ப்பங்கள் பதிவாகி உள்ளன.	சகல உள்ளகக் கணக்காய்வு உசாவல்களுக்கும் வாதுரை வழங்குவதற்கு ஒரு மாத காலத்திற்கும் அதிகமான காலம் எடுக்கப்படவில்லை என்பதுடன், சில கணக்காய்வு உசாவல்களுக்கு வாதுரை வழங்குவதற்கு பிராந்திய அலுவலகங்களில் இருந்து தகவல்களைப் பெற்றுக் கொள்ள வேண்டி உள்ளமையால், அதற்காக சில வேளை தாமதம் ஏற்பட்டு உள்ளது.
04. வருடாந்திர பொருட் கணப்பீட்டில் வெளிப்படுத்தப்பட்ட மிகைகள் மற்றும் பற்றாக்குறைகள் தொடர்பான பரிந்துரைகளும் உரிய கால எல்லைக்குள் அமுல்படுத்தப்பட்டு இருக்கவில்லை.	திணைக்களத்திற்குச் சொந்தமான 189 அலுவலகங்கள், 545 அரச நில அளவையாளர்கள், 10 சுற்றுலா மாளிகைகள் மற்றும் 03 அளவையியலும் படமாக்கலும் நிறுவனங்கள் (மொத்தம் 747 பேரேடுகள்) காணப்படுகின்றமையாலும் அவ் அலுவலகங்கள் மற்றும் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டுள்ள இத் திணைக்களத்திற்கன்றே விசேடமாக உள்ள பொருட்கள் (பல உபகரணங்களுடன்)

	அதிகளவு உள்ளமையால், அவை அனைத்தையும் ஆராய்ந்து கடிதங்களைத் தயாரிப்பதற்கு அதிக காலம் செலவாகின்றமையால் தீர்வைகளை வழங்குவதற்கு தாமதமாகினாலும் தற்பொழுது அனைத்து அலுவலகங்கள் மற்றும் நில அளவையாளர்களுக்கும் தீர்வைகள் வழங்கி முடிக்கப்பட்டு உள்ளன.
05. வாகனம் ஒன்று பாவனையில் இருந்து ஒதுக்கப்பட்டு 08 மாதங்களுக்குக் குறைவான காலத்தில் அகற்றப்பட்டு இருக்கவில்லை.	திணைக்களத்தின் பிராந்திய நில அளவை அலுவலகங்கள் உட்பட நாடு பூராகவும் பரவிக் காணப்படுகின்ற நிறுவனங்களின் வாகன அகற்றல் பணிகளின் ஒருங்கிணைப்பு பிரதான அலுவலகத்தின் மூலம் முன்னெடுக்கப்படுவதுடன், அக் குழுவிற்கு ஏனைய நிறுவனங்களில் இருந்தும் உத்தியோகத்தர்களை தொடர்புபடுத்துதல் வேண்டும். அதில் விலை மதிப்பீட்டுக் குழுவை நியமித்தல், அமைச்சரவை அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளுதல், வாகனப் பதிவுகளை இரத்துச் செய்தல் மற்றும் விலை மனு கோருதல் போன்ற செயல்முறைகளை பல படிமுறைகளின் கீழ் முன்னெடுக்க வேண்டும் என்பதால், சில தாமதங்கள் ஏற்பட்டாலும், குழு ஒன்றுகூடல் மற்றும் நினைவூட்டல் மூலமும் பங்குபற்றாத பிற நிறுவனங்களின் உறுப்பினர்களுக்குப் பதிலாக குழுவிற்கு புதிய உறுப்பினர்களை மாகாண நில அளவையாளர் தாமதமின்றி நியமித்து இப்பணிகளை துரிதப்படுத்துவதற்கு ஆவன செய்யப்பட்டு வருகின்றது. அதற்கமைய, குறித்த தொழிற்பாட்டு சுட்டி இலக்குகளை எட்டுவதற்காக எதிர்வரும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு உள்ளன.
06. ஒரு வருட காலத்திற்கும் அதிகமாக நிலவுகின்ற கடன் நிலுவை இருப்புகள் காணப்பட்டன.	2022 ஆம் ஆண்டில் காணப்பட்ட கடன் இருப்பில் ரூ. 2,215,713.48 தொகையானது தீர்க்கப்பட்டுள்ளது. தற்பொழுது அறவிடப்பட்டு வருகின்ற கடன் நிலுவை இருப்பு ரூ. 780,527.97 ஆகும். ரூ. 1,363,726.25 பெறுமதியான கடன் நிலுவை இருப்பை அறவிடுவதற்கு ஆவன செய்யப்பட்டு வருகின்றன. பதிவழிப்பதற்கு ஆவன செய்யப்பட்டு வருகின்ற கடன் நிலுவை இருப்பு ரூ. 502,126.00 ஆகும்.

இரண்டாம் பகுதி: 97.00	
07. திட்டமிடப்பட்ட பயிற்சி வாய்ப்புக்களில் வழங்கப்பட்டிருந்த பயிற்சி வாய்ப்புகளின் அளவு 50% ஐயும் விட குறைவான மட்டத்தில் காணப்பட்டது.	2022 ஆம் ஆண்டில் பயிற்சிகளுக்காக வழங்கப்பட்ட மானியத் தொகை ரூ. 8,378,292.02 ஆக இருந்ததுடன் அதில் ரூ. 2,962,437.08 மானியத் தொகை எஞ்சி இருந்தது. பயிற்சிகளுக்காக செலவிடப்பட்டிருந்த மானியங்களின் சதவிகிதம் 65% ஆகும்.

நிலையியற்கட்டளைஇல119(4) இன்படி, அரசாங்கக் கணக்குக் குழுவினால் பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையுடன் தொடர்புடைய அவதானிப்புகளையும்மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளையும் சமர்ப்பித்தல்.

பாராளுமன்ற அமர்வு இல: 79

நிறுவனத்தின் பெயர்:காணி உரித்து நிர்ணயத் திணைக்களம்

குழுவினால் அடையாளம் காணப்பட்ட பலவீனங்கள் / குறைபாடுகள்	திருத்தம் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் / தற்போதைய நிலை
கணக்காய்வாளர் நாயகத்தின் கணக்காய்வு வினாக்களுக்கும் உள்ளககணக்காய்வு வினாக்களுக்கும் பதில்கள் ஒரு மாதத்திற்குள் அனுப்பப்படவில்லை.	திணைக்களத்தின் பிராந்திய அலுவலகங்களிடமிருந்து தேவையான தகவல்களைப் பெற வேண்டியிருந்ததால், சில சந்தர்ப்பங்களில் கணக்காய்வு வினாக்களுக்கு ஒரு மாதத்திற்குள் பதில்களை வழங்க முடியவில்லை என்றாலும், இயன்ற எல்லா நேரங்களிலும் ஒரு மாதத்திற்குள் பதில்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.
2017.06.26 அன்று வெளியிடப்பட்ட சொத்துகள் முகாமைத்துவச் சுற்றறிக்கை இல. 1/2017 இன் பந்தி13 இன்படி, அதில் குறிப்பிடப்பட்ட விதிகளை நடைமுறைப்படுத்த ஒத்துழைக்கும் பொருட்டு பொருத்தமான அலுவலர்ஒருவரை நியமித்தமை குறித்து கணக்குப் பொறுப்பாளர் நாயகத்தின் அலுவலகத்துக்கு அறிவிக்கத் தவறியமை.	2024.ஒரு அலுவலர்நியமிக்கப்பட்டு, 2024 ஆம் ஆண்டில்கணக்குப் பொறுப்பாளர் நாயகத்தின் அலுவலகத்துக்கு அதுகுறித்து அறிவிக்கப்பட்டுள்ளது.
அனைத்து வாகனங்களின் உரித்தை உறுதிப்படுத்தும் கடிதங்கள் கையிலில்லை.	திணைக்களத்துக்குச் சொந்தமான 40 வாகனங்களில் 39 வாகனங்களின் உரித்தும் திணைக்களத்திலேயே உள்ளது. மற்றொரு வாகனம் உலக உணவு மற்றும் வேளாண்மை நிறுவனத்துக்குச்சொந்தமானது. அந்த வாகனத்தின் உரித்தை இத்திணைக்களத்திற்கு மாற்றுவதற்கான தொடர்புடைய ஆவணங்கள் இப்போது கையளிக்கப்பட்டுள்ளன.
கைவிடப்பட்டஒரு வாகனம் எட்டு மாதங்களுக்குக் குறைவான காலத்திற்குள் அகற்றப்படவில்லை.	அகற்றுதல் நடவடிக்கை 11.10.2024 அன்று மேற்கொள்ளப்பட்டது.
ஒவ்வொரு வாகனத்திற்குமான பதிவு புத்தகங்கள் (Log Books) புதுப்பிக்கப்பட்ட முறையில் பேணப்படவில்லை.	திணைக்களத்துக்குச் சொந்தமான அனைத்து வாகனங்களின் பதிவு புத்தகங்களும் (Log Books) இப்போது புதுப்பிக்கப்பட்டுள்ளன.
நிதி ஒழுங்குவிதி இல94(1)இன் பிரிவின்படி, வேறு விதமாக ஏற்பாடுசெய்யப்படாதவற்றைத் தவிர, ஆண்டின் இறுதியில் ஒதுக்கீட்டை மீறிய வகையில் நிதிசார் செயற்பாடுகள்மேற்கொள்ளப்பட்டுள்ளன.	2024 ஆம் ஆண்டிலிருந்து ஒதுக்கீட்டை மீறிய வகையில் எந்த நிதிசார் செயற்பாடுகளும்மேற்கொள்ளப்படவில்லை ; எதிர்காலத்திலும் இவ்விடயத்தில் கவனம் செலுத்தப்படும் என குறிப்பிட்டுள்ளது.

ஒரு ஆண்டிற்கும் மேலான காலத்திலிருந்து நிலுவையில் உள்ள கடன் இருப்புகள் காணப்படுகின்றன.	நிலுவையில் உள்ள கடன் இருப்புகளை ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்களின்ஓய்வூதிய பணிக்கொடையிலிருந்து மீட்க நடவடிக்கைகள் எடுக்கப்படும்.பணியிலிருந்து இடைநீக்கம் செய்யப்பட்ட இரு உத்தியோகத்தர்கள் தற்போது பொது நிர்வாகம், மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் மீண்டும் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர். அவர்கள் கடமையில் சேர்ந்த பின்பு, அவர்களிடமிருந்து நிலுவைக் கடன் இருப்புகளை மீட்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். மேலும், பணியிலிருந்து இடைநீக்கம் செய்யப்பட்ட மற்றொரு உத்தியோகத்தர்தொடர்பான ஒழுங்காற்று நடவடிக்கை இதுவரை நிறைவு பெறவில்லை; பதவியை விட்டு விலகியதாகக் கருதப்பட்ட மற்றொரு உத்தியோகத்தரைமீண்டும் பணியில் அமர்த்துவதற்கான பரிந்துரை வழங்கப்பட்டுள்ளது.
நிதி ஒழுங்குவிதி 371 இன் படி, வழங்கப்பட்ட தற்காலிக முன்பணம், அதற்காக வழங்கப்பட்ட நோக்கம் நிறைவடைந்த உடனடியான ஒரு மாதத்திற்குள் தீர்ப்பனவுசெய்யப்படவில்லை.	பிராந்திய அலுவலகங்களுக்கு வழங்கப்பட்ட தற்காலிக முன்பணங்கள் சிலவற்றின் தீர்ப்பனவுகள் ஒரு மாத காலத்தை மீறியுள்ளன. எனினும், அத்தகைய மீதித் தொகைகள் இருந்தால், அவை தொடர்புடைய நோக்கம் நிறைவடைந்த உடனே திணைக்களத்தின் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படுகின்றன. ஆகையால், இயன்றவரை இத்தகைய முன்பணங்கள் ஒரு மாத காலத்துக்குள் தீர்ப்பனவுசெய்யப்படும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
தகவல் கோரிக்கைகளுக்கான பதில்கள் வழங்கப்படாததைக் குறித்து பெறப்பட்ட முறைப்பாடுகளுக்கான ஆவணப்படுத்தல் நடவடிக்கைகள் குறித்து விளக்கங்கள் பதிவு செய்யப்படும் பதிவேடுகள் பேணப்படவில்லை.	தற்போது, குறித்தபதிவேடு முறையாக பேணப்பட்டு வருகின்றது.
பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவஅமைச்சின் 06.02.2008 ஆம் திகதி வெளியிடப்பட்ட 05/2008 ஆம் இலக்கச் சுற்றறிக்கையும், 24.01.2018 ஆம் திகதி வெளியிடப்பட்ட 05/2008(1) ஆம் இலக்கச் சுற்றறிக்கையினாலும் திருத்தியமைக்கப்பட்ட குடிமக்கள் / சேவைபெறுநர் பிரகடனம்(Citizen/Clients Charter) முறையாக தயாரிக்கப்படாததுடன், நடைமுறைக்கு கொண்டு	திணைக்களத்தின் அனைத்து பிராந்திய அலுவலகங்களுக்கும் உரியவாறுகுடிமக்கள் / சேவைபெறுநர்பிரகடனம் (Citizen/Clients Charter) முறையாக தயாரிக்கப்பட்டு, பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. அதற்கமைய, அதன் நடைமுறைப்படுத்தல்பிராந்திய அலுவலகங்களின்

வரப்படவில்லை. அத்துடன், அந்தக் குடிமக்கள் / சேவைபெறுநர் பிரகடனம்நடைமுறைப்படுத்தப்படுவதைகண்காணிக்கும் அல்லது மதிப்பீடு செய்வதற்கான முறையும் உருவாக்கப்படவில்லை.	துணைஆணையாளர்களாலும்/ உதவி ஆணையாளர்களாலும், தலைமை அலுவலகத்தின் உதவி ஆணையாளர்களாலும்கண்காணிக்கப்பட்டுள்ளது.
24.01.2018 அன்று வெளியிடப்பட்டபொது நிருவாக சுற்றறிக்கை இல02/2018இன்விதிகளின்படி தயாரிக்கப்பட வேண்டியமனிதவளத் திட்டம் (Human Resource Plan) முறையாக தயாரிக்கப்படவில்லை. மேலும், தயாரிக்கப்பட்ட மனிதவளத் திட்டத்தின் படி, பணியாளர்களில் குறைந்தபட்சம் 50 சதவீத பேருக்கு ஆண்டுக்கு குறைந்தது 12 மணித்தியாலப் பயிற்சி வழங்கப்பட்டமை உறுதிசெய்யப்படவில்லை.	தற்போது மனிதவளத் திட்டம் (Human Resource Plan) தயாரிக்கப்பட்டுள்ளது, மேலும் அதனடிப்படையில் பயிற்சித் திட்டத்திற்கு ஏற்ப உத்தியோகத்தர்களுக்குத்தேவையான பயிற்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.
அனைத்து பணியாளர்களையும் உள்ளடக்கிய வகையில் செயலாற்றுகைஉடன்படிக்கை(Performance Agreement) தயாரிக்கப்படவில்லை மேலும் அவ்வாறான உடன்படிக்கை நிறைவேற்றப்படவுமில்லை.	30.11.2023 அன்று வெளியிடப்பட்டபொது நிருவாக சுற்றறிக்கை இல02/2018(i) மூலம் செயலாற்றுகை உடன்படிக்கை (Performance Agreement)தயாரிக்கும் நடைமுறை இரத்துச்செய்யப்பட்டுள்ளது.
மனிதவள மேம்பாட்டு திட்டங்களை (Human Resource Development Plans) தயாரிப்பதற்கும் திறன்விருத்தி மற்றும் திறமைகள் மேம்பாட்டு திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கும், நிறுவனத்தில் ஒரு மூத்த உத்தியோகத்தர்நியமிக்கப்படவில்லை.	அத்தகவலுடன் தொடர்புடைய வகையில் திணைக்களத்தின் ஒரு மூத்த உத்தியோகத்தர்நியமிக்கப்பட்டு, அதுகுறித்துபொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுக்குஅறிவிக்கப்பட்டுள்ளது.
திட்டமிடப்பட்ட பயிற்சித் திட்டங்களில், நடைமுறையில் வழங்கப்பட்ட பயிற்சிவாய்ப்புகள் 50 சதவீதத்திற்குக் குறைவாகக் காணப்படுகின்றன.	தற்போது, சட்டப்படி அவசியமான பயிற்சிகளும் திறன் விருத்திப்பயிற்சிகளும் வழங்கப்படுவதற்காக, பிராந்திய அலுவலக மட்டத்திலும் தலைமையகத்திலும் உள்ள அனைத்து நிலைகளிலான பணியாளர்களையும் தேர்வு செய்து பயிற்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.
அனைத்து உத்தியோகத்தர்களினதும்சொத்துகள் மற்றும் பொறுப்புகள்குறித்த அறிக்கைகள் (Assets and Liabilities Statements) சமர்ப்பிக்கப்படவில்லை.	தற்போது, அனைத்து பதவிநிலை உத்தியோகத்தர்களும்தங்களது சொத்து மற்றும் பொறுப்புகள் குறித்த (Assets and Liabilities Statements)குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் சமர்ப்பித்துள்ளனர்.

நிலையியற்கட்டளை எண் 119(4) **இன் படி, அரசுக் கணக்கு குழுவால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையைச் சார்ந்த அவதானிப்புகள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் சமர்ப்பிப்பு**
பாராளுமன்ற அமர்வு எண்: 79
அமைப்பின் பெயர்: நிலப் பயன்பாட்டு கொள்கை திட்டமிடல் துறை - 2022

தொடர் **எண்**	**குழுவினால் கண்டறியப்பட்ட பலவீனங்கள் / குறைபாடுகள்**	**சரிசெய்வதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் /** தற்போதைய **நிலை**
01	அனைத்து வாகனங்களின் உரிமை உறுதிப்படுத்தும் கடிதங்கள் கோப்பில் இல்லை. ஒவ்வொரு வாகனத்திற்குமான பதிவேடுகளும் புதுப்பிக்கப்பட்ட அடிப்படையில் பராமரிக்கப்படவில்லை.	திணைக்களத்திற்கு சொந்தமானஅனைத்து வாகனங்களும் பணிப்பாளர்நாயகத்திற்கு பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஒவ்வொரு வாகனத்திற்குமான பதிவேடுகளும் முறையாக புதுப்பிக்கப்பட்டுள்ளன.
02	வழங்கப்பட்ட பயிற்சி வாய்ப்புகளின் எண்ணிக்கை திட்டமிடப்பட்ட பயிற்சி வாய்ப்புகளில் 50% க்கும் குறைவாகவே இருந்தது.	இதுவரை இந்த ஆண்டிற்கான திட்டமிடப்பட்ட பயிற்சி வாய்ப்புகள் வழங்கல் 100% முழுமையாக நிறைவேற்றப்பட்டுள்ளது

கே. டீ. லால் காந்த (பா.ம)
கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு
(காணி பிரிவு)